# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 14 திங்கட்கிழமை 29.12.2025 கதிர் 423







# மன்னார் நீதிமன்றத்தின் முன் துப்பாக்கிச்சூடு: பிரதான சந்தேகநபர் உட்பட இருவர் சிக்கினர்!



மன்னார், டிச. 29

மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உள்ளடங்களாக இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக இவ்வருடம் ஜனவரி மாதம் 16 ஆம் திகதியன்று இரண்டு நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்படிஇ கிடைத்த தகவலின் 7➤

# எதிரணி ஊடக சுதந்திரம் பற்றி பேசுவது சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது!

## பிரதி அமைச்சர் பிரதீப் சாட்டையடி



கொழும்பு, டிச. 29

ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றைக் கொளுத்தியவர்கள், இன்று ஊடக சுதந்திரம் பற்றி கதைப்பது "சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது" என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு ஊடக அடக்குமுறையைக் கையாள்வதாக எதிரணிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த காலங்களில் ஊடக அடக்குமுறை கையாளப்பட்டது. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் கொளுத்தப்பட்டன.

இவ்வாறான செயலில் ஈடுபட்டவர்கள் இன்று ஊடக சுதந்திரம் பற்றி கதைப்பது நகைப்புக்குரிய விடயமாகும்.

எமது ஆட்சியில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும். ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்குரிய உரிமைகள் நிச்சயம் பாதுக்காக்கப்படும்.

ஊடக நிறுவனங்கள் உண்மையை எழுத வேண்டும். அவ்வாறு எழுதினால் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை." - என்றார்.

# 20 கோடிக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருளுடன் நால்வர் கைது



20 கோடிக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருளுடன் நால்வர் கைது

20 கோடியே 68 இலட்சத்து 40 ஆயிரம் ஷரூபா பெறுமதியான 'குஷ்' போதைப்பொருள் தொகையை கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக வெளியே கொண்டு செல்ல முயன்ற நான்கு இலங்கை பயணிகள் இன்று விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது 7➤

# டக்ளஸ் தேவானந்தாவுக்கு சிறைக்குள் உயிராபத்து

## *பாதுகாப்பு வழங்குமாறு அழுத்தம்*




முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னர் பல தடவைகள் எதிரிகளாலும், எதிர்க்கட்சிகளாலும் உயிர் ஆபத்துக்களை எதிர்கொண்ட ஒருவராவார், அவருக்கான 7➤

# சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த குகநேசன் டினோஜா என்ற சிறுமி சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அண்மையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில 7➤

# பேருந்து தரிப்பிடத்தில் ஆணின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்தில் இருந்து ஆண் 7➤

# போதையில் வாகனம் செலுத்தினால் குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை



கொழும்பு, டிசெ.29

இனிவரும் காலங்களில் மதுபோதையில் மற்றும் கவனக்குறைவாக வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக, போக்குவரத்துச் சட்டங்களுக்கு மேலதிகமாகக் குற்றவியல் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதி பாதுகாப்புப் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. ஜி. ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருள் மற்றும் மதுப்பாவனையே இந்த விபத்துக்களுக்குப் பிரதான காரணம் எனக் குறிப்பிட்ட அவர், இனிவரும் காலங்களில் இத்தகைய விபத்துக்களின் போது போக்குவரத்துச் சட்டங்களுக்குப் மேலதிகமாக குற்றவியல் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

“கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் வீதி விபத்துக்கள் 271 ஆல் அதிகரித்துள்ளன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 317 ஆல் அதிகரித்துள்ளது. இருப்பினும், பாரிய விபத்துக்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சி காணப்படுகிறது.

குறிப்பாக, சாரதிகளின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையான செயற்பாடுகளே இந்த விபத்துக்கள் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

நாளாந்த விபத்துக்களை ஆராயும்போது, பாதசாரிகளே அதிகளவில் விபத்துக்களுக்குள்ளாகின்றனர்.

வருடாந்த விபத்துக்களில் 31 சதவீதமானவை பாதசாரிகள் தொடர்பானவையாகும். அதேபோல் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் பின்னால் அமர்ந்து பயணப்பவர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகளும் அதிகளவில் விபத்துக்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

பல விபத்துக்களுக்குப் போதைப்பொருள் மற்றும் மதுப்பாவனையே காரணமாகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

இதற்கமைய, இனிவரும் காலங்களில் மதுபோதையில், போதைப்பொருள் பாவித்துக் கவனக்குறைவாக வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராகக் குற்றவியல் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்” என்றார். (ஐ)

# போனஸ் கொடுப்பனவை கோரி விமான நிலைய ஊழியர்கள் போராட்டம்




கொழும்பு, டிசெ.29

வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரமவினால் அறிவிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான போனஸ் கொடுப்பனவாக, 05 மாத அடிப்படைச் சம்பளத்தை வழங்குமாறு வலியுறுத்தி விமான நிலைய ஊழியர் தொழிற்சங்கங்கள் இன்று (29) போராட்டத்தில் ஈடுபட்டன.

இந்த போராட்டத்தில் விமான நிலைய ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கம், பொதுஜன ஊழியர் சங்கம், முற்போக்கு ஊழியர் சங்கம், தேசிய ஊழியர் சங்கம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 50 ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

விமான நிலைய நிறுவனத்தின் வருடாந்த தேறிய லாபம் 21 பில்லியன் ஷரூபாயாக உள்ள பின்னணியில், தற்போது 2025ஆம் ஆண்டுக்கான போனஸ் கொடுப்பனவாக இரண்டு மாத அடிப்படைச் சம்பளம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவர் முஹந்திரம் இதன்போது தெரிவித்தார்.

இதற்கமைய, இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து குறைந்தபட்சம் மேலும் இரண்டு மாத அடிப்படைச் சம்பளத்தையாவது போனஸாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொழிற்சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர் (ஐ).





## பயிர்ச் சேதங்களுக்கான இழப்பீடு: விவசாயத் திணைக்களம் விசேட அறிக்கை

'டித்வா' புயலினால் சேதமடைந்த நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான மானியங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்குவது தொடர்பில் விவசாயத் திணைக்களம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

தற்போது வரை 66,965 நெல் விவசாயிகளுக்கும் ஏனைய பயிர்ச் செய்கைகளுடன் தொடர்புடைய 16,869 விவசாயிகளுக்கும் மானியங்கள் மற்றும் இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, நெற்செய்கைக்காக 66,965 விவசாயிகளுக்குச் சொந்தமான 33,215 ஹெக்டேயர் நிலப்பரப்பிற்கு 4,982 மில்லியன் ஷரூபாய் பணம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நெற்செய்கைக்காக தற்போது வரை சுமார் 50,000 ஹெக்டேயர் நிலப்பரப்பிற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி வழங்கக்கூடிய அனைத்து விண்ணப்பங்களுக்கும் டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேலதிக உணவுப் பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழவகைகளுக்கான பயிர்ச் சேத இழப்பீடாக இதுவரை 16,869 விவசாயிகளுக்கு 670 மில்லியன் ஷரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 3,708 ஹெக்டேயர் நிலப்பரப்பிற்காக இந்த இழப்பீட்டுத் தொகை தற்போது வரை வழங்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மின்சாரம் உட்பட பல சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

மின்சாரம் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், எரிபொருள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், எரிவாயு விநியோகம் அல்லது பகிர்ந்தளிப்பு உள்ளிட்ட பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் விதிகளுக்கமைய, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் 2025 டிசம்பர் 28 ஆம் திகதியிடப்பட்ட 2468ஃ46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின்படி, வைத்தியசாலைகள், பராமரிப்பு நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற நிறுவனங்களில் நோயாளர்களைப் பராமரித்தல், அனுமதித்தல், பாதுகாத்தல், உணவளித்தல் மற்றும் சிகிச்சையளித்தல் தொடர்பான அனைத்து சேவைகள். நோயாளர் காவு வண்டி சேவைகள், பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்துக்கான பொது போக்குவரத்து சேவைகள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புடன் தொடர்புடைய அனைத்து சேவைகள்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல், பாதுகாத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான சேவைகள். அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கள மட்ட அதிகாரிகளால் ஆற்றப்பட வேண்டிய அனைத்து சேவைகள்.

இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கிகள் மற்றும் காப்புறுதி சேவைகள், உள்ளூராட்சி நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் நீர் வழங்கல், மின்சாரம், கழிவுநீர் அகற்றும் முறைமை, தீயணைப்பு, கழிவு சுத்திகரிப்பு மற்றும் குப்பை அகற்றுதல் உள்ளிட்ட அனைத்து சேவைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஐ)

## ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகள் டிஜிட்டல் மயம்

ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தின் கீழ், நிறுவனங்கள் மற்றும் உறுப்பினர்களை இணையவழியில் பதிவு செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, இன்று முதல் இச்சேவைகள் இணையவழியில் முன்னெடுக்கப்படும் என தொழிலாளர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு தொழிலாளர் அமைச்சின் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொழிலாளர் அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, தொழிலாளர் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## யாழில் 3012 குடும்பங்களுக்கு மலசலக்கூட வசதி இல்லை!



யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 3,012 குடும்பங்கள் மலசலக்கூட வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாக யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கலந்துரையாடலின் போது, பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரன் மூர்த்தி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன், சாந்தை கிராமத்தில் பல குடும்பங்கள் மலசலக்கூட வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும், அவர்களின் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி மலசலக்கூடங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த துறைசார் அதிகாரிகள், யாழ். மாவட்ட புள்ளிவிபரங்களின்படி மாவட்டம் முழுவதும் சுமார் 3,012 குடும்பங்களுக்கு மலசலக்கூட வசதிகள் இல்லை என்பது தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டனர். (ஐ)

## தமிழகத்தின் அடுத்தகட்ட உதவி இலங்கைக்கு நிவாரணக் கொள்கலன்

இலங்கையில் அண்மையில் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, தமிழகத்திலிருந்து அடுத்த வாரத்தில் மற்றுமொரு நிவாரண கொள்கலன் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

அதிதீவிர வானிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, தமிழகத்திலிருந்து இதுவரை 4 கொள்கலன்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆடைகள், உலர் உணவுப் பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள், மருந்துகள் மற்றும் சுகாதார மருத்துவ துவாய்கள் உள்ளிட்டவை இந்த நிவாரண கொள்கலன்களில் அடங்குகின்றன. இந்தநிலையில், மக்களின் தேவைக்கருதி அடுத்த வாரத்தில் மேலும் ஒரு நிவாரண கொள்கலன் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்கான ஆங்கில ஆய்வு மாநாடு!




தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பிரிவினரால் ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் மாநாடு - 2025 எதிர்வரும் 31ஆம் திகதி, புதன்கிழமை காலை 8.00 மணி முதல் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி. கமலராஜன் மற்றும் ஆங்கிலம், வெளிநாட்டு மொழிகள் பிரிவின் இயக்குநரும், பிரதிக்கல்விப் பணிப்பாளருமான பி. என். சுதர்சன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் முதன்மை உரையாளராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இம் மாநாட்டில், ஆங்கில மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு, ஏ2 மொழி கற்பித்தலில் டிஜிட்டல் கருவிகள், கலப்பு கற்றல் முறை, தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு, மாணவர் ஈடுபாடு மற்றும் ஊக்குவிப்பு போன்ற சமகால விடயங்களில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

ஆங்கில ஆசிரியர்களின் தொழில்முறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் இம் மாநாடு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## யாழ். உட்பட பல பகுதிகளில் மோசமடைந்துள்ள காற்றின் தரம் முகக்கவம் அணியவும்! விடுக்கப்பட்ட எச்சரிக்கை



நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் குறைந்த மட்டத்தை எட்டியுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் பெரும்பாலான நகரங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் காற்றின் தரச் சுட்டெண் (யுஞஜ) மிதமான அளவில் இருந்தது. அதேவேளை, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் சற்று ஆரோக்கியமற்ற நிலையில் இருந்தது.

அடுத்த 24 மணித்தியாலங்களில் காற்றின் தரச் சுட்டெண் 56-134 க்கு இடையில் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது,

அதேவேளை யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், பொலன்னறுவை மற்றும் அநுராதபுரத்தில் சற்று ஆரோக்கியமற்ற நிலையில் இருக்கும்.

இயலுமானவரை முகக்கவசங்களை அணியவும், உணர்திறன் மிக்கவர்கள் சுவாசிப்பதில் சிரமங்களை சந்தித்தால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறவும்.

அதிகபட்ச காற்றின் தரச் சுட்டெண் காலை 8.00 - 9.00 மணி முதல் மாலை 4.00 - 5.00 மணி வரை இருக்கும்.

ஒப்பீட்டளவில், அடுத்த 24 மணி நேரத்திற்குள் நாட்டின் பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரச் சுட்டெண் மிதமான அளவில் இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# மும்பை மாநகராட்சி தேர்தல்: பா.ஜ., - சிவசேனா கூட்டணி தனித்து களமிறங்குகிறது தேசியவாத காங்.,



மஹாராஷ்டிராவின் மும்பை மாநகராட்சி தேர்தலில், ஆளும் 'மஹாயுதி' கூட்டணியில் உள்ள பா.ஜ., - சிவசேனா கூட்டணி வைத்துள்ள நிலையில், மற்றொரு கூட்டணி கட்சியான துணை முதல்வர் அஜித் பவாரின் தேசியவாத காங்., தனித்து போட்டியிட முடிவு செய்துள்ளது.

மஹாராஷ்டிராவில் முதல்வர் தேவேந்திர பட்னவிஸ் தலைமையில், பா.ஜ., - சிவசேனா - தேசியவாத காங்., அடங்கிய மஹாயுதி கூட்டணி ஆட்சி நடக்கிறது. இங்கு, 246 நகராட்சிகள், 42 நகர பஞ்சாயத்துகள் என, மொத்தம் 288 உள்ளாட்சி அமைப்புகளுக்கு சமீபத்தில் தேர்தல் நடந்தது.

இதில், 200க்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை, ஆளும் மஹாயுதி கூட்டணி கைப்பற்றி சாதித்தது. எதிர்க்கட்சிகளான காங்., - உத்தவ் தாக்கரேயின் சிவசேனா - சரத் பவாரின் தேசியவாத காங்., அடங்கிய 'மஹா விகாஸ் அகாடி' 50க்கும் குறைவான உள்ளாட்சி அமைப்புகளையே கைப்பற்றியது.

இதை தொடர்ந்து, ஆசியாவிலேயே பணக்கார மாநகராட்சியான மும்பை உட்பட, மஹாராஷ்டிராவில் உள்ள 29 மாநகராட்சிகளுக்கு, அடுத்தாண்டு ஜன., 15ல் தேர்தல் நடக்கிறது் 16ல் ஓட்டுகள் எண்ணப்பட உள்ளன.

மற்ற மாநகராட்சிகளை காட்டிலும், மும்பையை கைப்பற்ற அனைத்து கட்சிகளும் மும்முரம் காட்டி வருகின்றன. காரணம், மற்ற மாநிலங்களின் பட்ஜெட்டை விட மும்பை மாநகராட்சியின் பட்ஜெட் அதிகம். மும்பை மாநகராட்சி தேர்தலை சந்திப்பதில், மஹா விகாஸ் அகாடி கூட்டணியில் குழப்பம் நிலவுகிறது.

தனித்து போட்டியிடுவதாக காங்., அறிவித்துள்ள நிலையில், 20 ஆண்டுகளாக எதிரும், புதிருமாக செயல்பட்டு வந்த உத்தவ் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, மஹாராஷ்டிரா நவநிர்மாண் சேனா தலைவர் ராஜ் தாக்கரே ஆகியோர் இணைந்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர். சரத் பவாரின் தேசியவாத காங்., எந்த ஆர்வமும் காட்டவில்லை. எதிர்க்கட்சி கூட்டணியில் நிலைமை இப்படியிருக்க, ஆளும் மஹாயுதி கூட்டணியிலும் மும்பை மாநகராட்சி தேர்தலை சந்திப்பது தொடர்பாக குழப்பம் நிலவுகிறது. கூட்டணியில் உள்ள பா.ஜ., - சிவசேனா - தேசியவாத காங்., ஆகியவை, முதலில் தனித்தனியாக போட்டியிட முடிவு செய்தன.

இந்நிலையில், மும்பை மாநகராட்சி தேர்தலில், பா.ஜ., - சிவசேனா இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளன. இது தொடர்பாக அந்த கட்சிகளின் தலைவர்களிடையே கடந்த சில நாட்களாக பேச்சு நடந்த நிலையில், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மும்பை மாநகராட்சியில் மொத்தம் 227 வார்டுகள் உள்ளன. இவற்றில், 207 வார்டுகளில் சிவசேனாவுடன் தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 128 வார்டுகளில் பா.ஜ.,வும், 78 வார்டுகளில் சிவசேனாவும் களமிறங்கும். மீதமுள்ள 20 வார்டுகளுக்கு, விரைவில் தொகுதி பங்கீடு இறுதி செய்யப்படும்.

யார் எத்தனை இடங்களில் போட்டியிடுகின்றனர் என்பது முக்கியமல்ல. மும்பை மக்களுக்கு ஊழலற்ற நிர்வாகத்தை வழங்குவதே முக்கியம். எங்கள் கூட்டணி, ஹிந்துத்துவா மற்றும் ஊழலற்ற மும்பைக்காக உருவாக்கப்பட்டுள்ளது. நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஆளும் மஹாயுதி கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேசியவாத காங்., தலைவரும், துணை முதல்வருமான அஜித் பவார், மும்பை மாநகராட்சி தேர்தலில் தனித்து போட்டியிட முடிவு செய்துள்ளார். இது, கூட்டணியில் புகைச்சலை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

# விஜய் கட்சியில் காங்கிரசுக்கு 50 'சீட்?' பா.ஜ., வளர்ச்சியை தடுக்க ராகுல் வியூகம்



'காங்கிரசை கூட்டணிக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள த.வெ.க., காங்கிரசுக்கு 50 தொகுதிகள் தர முன் வந்துள்ளது' என தகவல் வெளியாகி உள்ளது.

வரும் சட்டசபை தேர்தலில், விஜயின் தமிழக வெற்றிக் கழகம், வலுவான கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தி.மு.க., - த.வெ.க., இடையே தான் போட்டி என கூறி வரும் விஜய், தி.மு.க.,வின் நீண்ட கால கூட்டணி கட்சியான காங்கிரசை இழுக்க முயற்சித்து வருகிறார்.

கஷரூரில் த.வெ.க., கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் உயிரிழந்தபோது, விஜய்க்கு தொலைபேசியில் காங்., மூத்த தலைவர் ராகுல் ஆறுதல் தெரிவித்தார். விஜயை காங்கிரஸ் தலைமை விரும்பினாலும், 22 ஆண்டுகளாக நீடிக்கும் தி.மு.க., உடனான கூட்டணியை, சட்டென முறித்துக்கொள்ள விரும்பவில்லை.

மேலும், லோக்சபா, ராஜ்யசபாவில் தி.மு.க.,வின் எம்.பி.,க்கள் பலம், பா.ஜ., அரசை எதிர்கொள்ள அவசியம் என காங்கிரஸ் தலைமை நினைக்கிறது. ஆனாலும், ராகுலுக்கு நெருக்கமான காங்கிரஸ் பொதுச்செயலர் வேணுகோபால் உள்ளிட்டோரும், தமிழக காங்கிரஸ் தலைவர்களில் பலரும், த.வெ.க., கூட்டணியை விரும்புவதாக கூறப்படுகிறது.

காங்., மேலிட தலைவர்களின் ஆசியுடன், கட்சியின் தகவல் பகுப்பாய்வு பிரிவு தேசிய தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி, கடந்த 5ம் தேதி விஜயை சென்னையில் சந்தித்தார். இது, தி.மு.க.,வை அதிர்ச்சி அடைய வைத்தது.

இந்நிலையில், த.வெ.க., கூட்டணியில் காங்கிரசுக்கு 50 தொகுதிகளை கொடுக்க தயாராக இருப்பதாக, விஜய் தரப்பில் இருந்து ராகுலுக்கு தகவல் அனுப்பப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக, காங்கிரஸ் தலைவர் ஒருவர் கூறியதாவது: தமிழகத்தின் பெரிய கட்சியாக இருந்த அ.தி.மு.க., நிலைமை இப்போது மோசமாக உள்ளது.

சட்டசபை தேர்தலில் வெற்றி பெறாவிட்டால், அக்கட்சி நிலைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதை பயன்படுத்தி, அ.தி.மு.க., இடத்திற்கு வர பா.ஜ., திட்டமிடுகிறது. இதை தடுத்து, அ.தி.மு.க., இடத்திற்கு த.வெ.க., வர வேண்டும். அப்போது தான், தமிழகத்தில் பா.ஜ., எழுச்சியை தடுக்க முடியும் என, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சோனியா, ராகுல் போன்றோர் நினைக்கின்றனர்.

வரும் தேர்தலில், த.வெ.க., 20 சதவீத ஓட்டுகளை பெற்றாலே, அ.தி.மு.க., இடத்தை பிடித்து விடும் என்பது காங்., மேலிடத்தின் கணிப்பாக உள்ளது. இதன் காரணமாகவே, விஜயை சமீபத்தில் பிரவீன் சக்கரவர்த்தி சந்தித்தார். லோக்சபா தேர்தல் தான் காங்கிரசுக்கு முக்கியம். சட்டசபை தேர்தலில் வென்றாலும், தி.மு.க., ஆட்சியில் பங்கு தரப் போவதில்லை.

தமிழக சட்டசபை தேர்தலுடன், மேற்கு வங்க சட்டசபை தேர்தலும் நடக்க உள்ளது. அங்கு, பா.ஜ., ஆட்சியை பிடிக்கும் என கருத்து கணிப்புகள் வருகின்றன. இது நடந்து, தமிழகத்திலும் குறிப்பிடத்தக்க இடங்களை பா.ஜ., பிடித்தால், தேசிய அளவில் காங்கிரசுக்கு கடும் நெருக்கடி ஏற்படும்.

எனவே, அ.தி.மு.க., இடத்திற்கு பா.ஜ., வராமல் தடுக்க, த.வெ.க.,வுடன் கூட்டணி அமைக்கலாம் என, காங்கிரசில் உள்ள பலர் சோனியா, ராகுலிடம் கூறி வருகின்றனர். இதை அவர்களும் மறுக்கவில்லை் தி.மு.க., கூட்டணியை முறிக்கவும் தயங்குகின்றனர்.

கடந்த 2016 சட்டசபை தேர்தலில் போட்டியிட்ட 41 தொகுதிகள் வேண்டும் என்பதில் காங்கிரஸ் தலைமை உறுதியாக உள்ளது. இதற்கு தி.மு.க., உடன்படாவிட்டால், கடைசி நேரத்தில் எதுவும் நடக்கலாம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# ரூ.217 கோடி தருகிறேன் என்னை விட்டுவிடுங்கள்

தொழிலதிபர்களின் மனைவியரிடம் இருந்து, 200 கோடி ரூபாய் பறித்த வழக்கில், 217 கோடி ஷரூபாய் வழங்க தயாராக இருப்பதாக மோசடி வழக்குகளில் சிறையில் உள்ள இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர், டில்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

பல மோசடிகளில் ஈடுபட்டு சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்தவர், கேரளாவைச் சேர்ந்த சுகேஷ் சந்திரசேகர். டில்லியில் இடைத்தரகராக செயல்பட்டு, அதிகார வர்த்தகத்தை கையில் வைத்துக் கொண்டு சொகுசாக வாழ்ந்து வந்தவர்.

அ.தி.மு.க.,வுக்கு இரட்டை இலை சின்னத்தை மீட்டுத் தருவதாக, கோடிக்கணக்கில் பணம் பெற்று மோசடி செய்தபோது, மிகவும் பிரபலமடைந்தார். இவர் மீது பல மோசடி வழக்குகள் உள்ளன. தற்போது இவர் சிறையில் உள்ளார்.

இவர், பிரபல பாலிவுட் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டசை காதலிப்பதாக கூறி வருகிறார். இது தவிர, அவருக்கு டில்லி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சொகுசு பங்களா, விலை உயர்ந்த வாட்சுகள் போன்ற ஆடம்பரப் பொருட்களை வாங்கி கொடுத்துள்ளார்.

இந்நிலையில், முன்னணி மருந்து நிறுவனமான, 'ரான்பாக்சி'யின் உரிமையாளர்களான சிவந்தர் சிங் மற்றும் மல்விந்தர் சிங், மோசடி வழக்கு ஒன்றில் சிறை சென்றனர். அவர்களுடைய மனைவியரை தொடர்பு கொண்டு, வழக்கில் இருந்து விடுவிக்க உதவுவதாக சுகேஷ் கூறியுள்ளார். இதற்காக அவர்களிடம் இருந்து, 200 கோடி ஷரூபாய் வரை பறித்து மோசடி செய்ததாக சுகேஷ் மீது வழக்கு உள்ளது.

இந்நிலையில், இவ்வழக்கில் புகார்தாரர் சிவந்தர் சிங்கின் மனைவி அதிதி சிங்கிற்கு, 217 கோடி ஷரூபாய் வழங்க தயாராக இருப்பதாக சுகேஷ் சந்திரசேகர் தரப்பில் அவரது வழக்கறிஞர் அனந்த் மாலிக், டில்லி பட்டியாலா நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவில், 'சுகேஷ் சந்திரசேகரின் உரிமைகளுக்கு பாதிப்பின்றி இந்த சமரசம் செய்யப்படுகிறது. இது, குற்றத்தை ஒப்புக்கொள்வதாகாது' என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனு, அடுத்த ஆண்டு ஜனவரி 3ல் விசாரணைக்கு பட்டியலிடப்படும் எனவும் நீதிமன்றம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# புறாக்கள் அழகுதான் ஆனாலும், ஆபத்து

சமாதானத்தின் சின்னம், அன்பின் அடையாளம், அழகுக்கு உதாரணம், காதலர்களின் தபால்காரன், ராணுவத்தின், ராஜ்ஜியத்தின் உற்றத்தோழன்... இப்படி எல்லாம் புறாக்கள் அழைக்கப்படுகின்றன் வர்ணிக்கப்படுகின்றன. அதன் அழகை, புத்திசாலித்தனத்தை, தூது செல்லும் திறமையை வியக்காதவர்கள் இல்லை. இதன் பெருமைகள் பலப்பல. இலக்கியம் முதல் மத நம்பிக்கை வரை, அனைத்து இடத்திலும் இடம் பெற்றுள்ளது. கிறிஸ்துவம் உள்ளிட்ட சில மதங்களில் கடவுளின் தூதராகவும் போற்றப்படுகிறது.

சகாரா பாலைவனம், ஆர்க்டிக், அண்டார்டிகா உள்ளிட்ட சில கடுமையான பருவநிலைகளை கொண்ட பிரதேசங்களில் மட்டுமே இது கிடையாது. மற்றபடி, உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. நாய், பூனை, குரங்கு, காக்கை, குருவிகள் போன்று இதுவும் மனித இனத்தோடு பாசத்தோடு ஒன்று சேர்ந்து வாழும் ஓர் உயிரினம். எந்த உயிரினத்துக்கும் ஒரு பிறப்பிடம் உண்டு. புறாவுக்கு அது இல்லை. ஆனால், 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே அதை மனிதன் வளர்க்க தொடங்கி விட்டான் என்கிறது வரலாறு. உலகம் முழுவதிலும் 344க்கும் மேற்பட்ட புறா வகைகள் உள்ளன.

இருந்தாலும், ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு குணாதிசயத்தை பெற்றுள்ளன. இவை பண்டைய காலத்தில் இருந்தே மனிதர்களுடன் தொடர்பு கொண்டு செய்தி அனுப்புதலுக்கு மட்டுமின்றி, சிறந்த சக்திமிக்க, மருத்துவ குணமிக்க உணவாகும் பயன்படுத்தப்படுகிறது. அதோடு, செல்லப் பிராணியாகவும் வீடுகளில் வளர்க்கப்படுகின்றன. 2ம் உலகப் போரின் போது கூட, தூது சென்று ஏராளமான உயிர்களைக் காப்பாற்ற உதவியுள்ளன. சுருக்கமாக, புறாக்கள் மனிதர்களுடன் நீண்ட நெடிய நெருங்கிய வரலாற்றைக் கொண்ட, பன்முகத்தன்மை வாய்ந்த, புத்திசாலித்தனமான பறவையாகும்.

இப்படிப்பட்ட பெருமைகள் கொண்ட இந்த பறவைக்கு மற்றொரு கொடூர முகமும் உள்ளது. அது, தன்னை நேசித்து வளர்க்கும் மனிதர்களின் உயிரையே பறிக்கக் கூடிய பயங்கரமான நோய்களை பரப்பும் தன்மை கொண்டது. இதன் காரணமாக, உலகளவில் புறாக்களை கூட்டமாக வளர்ப்பதற்கும், பொது இடங்களில் உணவு அளிப்பதற்கும் தடைகள் விதிக்கப்பட்டு வருகின்றன. புறாக்களின் எச்சங்கள், இறகுகள் நோய்களை பரப்பும் வல்லமை கொண்டவை. இவை மனிதர்களுக்கு ஹிஸ்டோபிளாஸ்மோசிஸ், கிரிப்டோகாக்கோசிஸ், சிட்டாக்கோசிஸ் போன்ற பூஞ்சை, பாக்டீரியா நோய்களைப் பரப்புகின்றன.

இவை பெரும்பாலும் புறாக்களின் காய்ந்த எச்சங்களில் இருந்து பறக்கும் தூசியை சுவாசிப்பதன் மூலம் ஏற்படுகின்றன. மேலும், சால்மோனெல்லா, ஈ.கோலை போன்ற நோய்களையும் பரப்புகிறது. இது நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும், ஆஸ்துமா உள்ளவர்களுக்கும் ஆபத்தானது.

ஹிஸ்டோபிளாஸ்மோசிஸ்: புறா எச்சங்களில் வளரும் பூஞ்சையால் ஏற்படும் கடுமையான சுவாச நோய்.

கிரிப்டோகாக்கோசிஸ்: பூஞ்சையால் ஏற்படும் மற்றொரு சுவாச நோய், இது கிரிப்டோகாக்கஸ் நியோபார்மன்ஸ் என்ற நுண்ணுயிரியால் ஏற்படுகிறது.

சால்மோனெல்லா: இது, புறா எச்சங்கள் மூலம் உணவு, நீர் ஆதாரங்கள் மாசுபடுவதால் அவை விஷமாகி மனிதர்களை

ஈ கோலை: புறா எச்சங்கள் நீர் அல்லது உணவுடன் கலக்கும்போது பரவக்கூடிய நோய்.

காம்பைலோபாக்டீரியோசிஸ்: காம்பைலோபாக்டர் ஜெஜூனி பாக்டீரியாவால் ஏற்படும் நோய்.

பறவை பராமரிப்பாளர் நுரையீரல் நோய்: புறாக்களின் எச்சங்களில் உள்ள புரதங்களின் மூலமாக ஏற்படும் ஒவ்வாமை நோய்.

இந்த நோய்கள் பல நாடுகளில் பல மனித உயிர்களை பலி வாங்கி உள்ளன. ஆனால், அதற்கான துல்லியமான புள்ளி விவரங்கள் இல்லை. இந்தியாவில் 2004ம் ஆண்டு வரையில் 13 பேர் இறந்திருப்பதாக ஆதாரப்பூர்வமற்ற ஒரு தகவல் உள்ளது. தமிழகத்திலும் 2 ஆண்டுகளுக்கு முன்பு பிரபல நடிகை மீனாவின் கணவரும், புறா வளர்த்ததால் நோய் தாக்கி இறந்தது பேசுபொருளாக இருந்தது. அது, சமூகத்தில் புறாக்களால் ஏற்படும் ஆபத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

புறாக்களால் மனிதர்களுக்கு ஏற்படும் இந்த நோய்களின் வீரியத்தை அறிந்ததால்தான், இந்தியாவில் சில மாநிலங்களில் அவற்றுக்கு பொது இடங்களில் உணவளிப்பதை தடை செய்து வருகின்றன. இப்போதைக்கு கர்நாடகா, மகாராஷ்டிராவில் மும்பையில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. கர்நாடகாவில் பொது இடங்களில் பொதுமக்களுக்கு புறாக்களால் பெரும் இடையூறுகளும், சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. இந்த காரணங்களுக்காகவும் அங்கு அரசே தடை விதித்துள்ளது.

பெங்களூரு உள்ளிட்ட சில பகுதிகளில் பொது இடங்களில் புறாக்களுக்கு உணவளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பராமரிக்கும் இடங்களில் மட்டும், குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே புறாக்களுக்கு உணவளிக்க அனுமதிக்கப்படுகிறது. ஆனால், மும்பையில் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இதனால், சில குறிப்பிட்ட பகுதிகளில் புறாக்களுக்கு உணவளிப்பது சர்ச்சைக்குரியதாக உள்ளது.



மும்பையில் நீதிமன்றம் விதித்த தடையால், "கபுதர்கானா" எனப்படும் பிரபலமான புறா உணவளிக்கும் இடங்கள் மூடப்பட்டன. இதற்கு பறவை ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களில் இதுபோன்ற அதிகாரப்பூர்வ தடை எதுவும் விதிக்கப்படவில்லை. டெல்லியில் பொது இடங்களில் புறாக்களுக்கு அதிகளவில் உணவு அளிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆபத்தை உணர்ந்துள்ள டெல்லி மாநகராட்சி, இதற்கு தடை விதிப்பது பற்றி நீண்ட காலமாக பரிசீலித்து வருகிறது.

ஆனால், இன்று வரையில் அதிகாரப்பூர்வமாக தடை விதிக்கவில்லை. காரணம், டெல்லியில் விலங்குகள், பறவைகள் நல ஆர்வலர்கள் அதிகமாக உள்ளனர். தெருநாய்களை காப்பகத்தில் அடைக்கும்படி சமீபத்தில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, அவர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இப்படிப்பட்ட நிலையில், புறாக்களுக்கு தடை விதித்தால் அதற்கும் போராட்டங்கள் நடைபெறும். இருந்தாலும், புறாக்களுக்கு பொது இடங்களில் உணவளிப்பதை தவிர்க்கும்படி மக்களை டெல்லி மாநகராட்சி அறிவுறுத்தி வருகிறது.

சாலைகள், நடைபாதைகள், அடுக்குமாடி குடியிருப்புகள், மொட்டை மாடிகளில் உணவளிக்க வேண்டாம் என்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இது ஒருபுறம் இருந்தாலும், தமிழகத்தில் புறாக்களுக்கு பொது இடங்களில் உணவளிப்பதற்கு தடை விதிப்பது, ஒரு முன்னெச்சரிக்கைநடவடிக்கையாக அமையும் என்பது பொதுவான, சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது. ஏற்கனவே பாதிப்புகள் வந்து விட்டது் அது மேலும் அதிகமாகாமல் தடுப்பது நல்லது அல்லவா?

பந்தய புறாக்களுக்கு உலகளவில் பெரும் கிராக்கி உள்ளது. தொடர்ச்சியாக 3 முறை சாம்பியன் பட்டம் வென்ற பெல்ஜியத்தை சேர்ந்த 2 பந்தய புறாக்களுக்கு வரலாறு காணாத வகையில் அதிக விலை கிடைத்துள்ளது. 'அர்மாண்டோ' என்ற புறா, கடந்த 2019ம் ஆண்டில் ரூ9.7 கோடிக்கு விற்கப்பட்டது. அதேபோல், 'நியூ கிம்' என்ற புறா ரூ.16 கோடிக்கு விற்கப்பட்டது. பொதுவாக, பந்தயங்களில் வென்ற புறாக்களின் இனப்பெருக்க உரிமைகளுக்கு அதிக விலை நிர்ணயிக்கப்படுகிறது.

பண்டைய காலங்களில் அரசர்கள், ராணுவத்தினர் தகவல்களை விரைவாக அனுப்ப புறாக்களைப் பயன்படுத்தினர். ஆங்கிலேயேர் காலத்தில் இருந்தே இந்தியாவில், குறிப்பாக ஒடிசா மாநிலத்தில் கடந்த 1946ம் ஆண்டில் இருந்தே புறாக்கள் மூலமாக தகவல் பரிமாற்றம் செய்து வருகிறது.

உலகளவில் இந்த நடைமுறை அழிந்து விட்ட போதிலும், இந்த மாநில காவல் துறை இப்போதும் 150 தூது புறாக்கள் அடங்கிய படையை பராமரித்து, மலை பகுதிகளுக்கு இயற்கை பேரிடர், வெள்ளம், புயல் போன்ற நேரங்களில் அவசர தகவல்களை அனுப்ப பயன்படுத்தி வருகிறது. இவை 'ஹோமிங் புறாக்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் புறா பந்தயம் நடத்தப்படுகிறது. இதில்,(7ஆம் பக்கம் பார்க்க..)

# ஆப்பரேஷன் சிந்தூரில் பயத்தில் உறைந்த பாக்., தலைவர்கள்: அதிபர் சர்தாரி ஒப்புதல்



ஆப்பரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் போது பாக்., ராணுவத்துக்கு மட்டுமல்லாமல், அந்நாட்டு தலைவர்களுக்கும் பயத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனை அந்நாட்டு அதிபர் ஆசிப் அலி சர்தாரி நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது ஒப்புக் கொண்டார்.

ஜம்மு -- காஷ்மீரின் பஹல்காமில், ஏப்., 22ல், பாக்., ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக, மே 7ல், 'ஆப்பரேஷன் சிந்தூர்' என்ற பெயரில், பாகிஸ்தானில் உள்ள ஒன்பது பயங்கரவாத முகாம்களை நம் படைகள் தகர்த்தன. நம் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பாக்., கெஞ்சியதை அடுத்து, சண்டை முடிவுக்கு வந்தது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி கூறியதாவது: ஆப்பரேஷன் சிந்தூர் துவங்கிய நேரத்தில் எனது ராணுவ செயலாளர் அருகில் உடன் இருந்தார். அவர் என்னிடம் வந்து, ' போர் துவங்கிவிட்டது ' எனத் தெரிவித்தார். ஆனால், அதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே விரைவில் போர் துவங்க வாய்ப்பு இருக்கிறது எனத் தெரிவித்து இருந்தேன். இதனால், அவர் புதியதாக இல்லை. அவர் என்னிடம் வந்து, நாம் பதுங்குக்குழிக்குள் சென்று விடுவோம் எனத் தெரிவித்தார். அதற்கு நான்,' தலைவர்கள் பதுங்குக்குழிக்குள் மரணமடையக்கூடாது. போர்க்களத்தில் தான் இருக்க வேண்டும். பதுங்குக்குழிக்குள் இருக்கக்கூடாது' எனத் தெரிவித்தேன். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## கீவ் நகரம் மீது 519 டிரோன்களை வீசி தாக்குதல் ரஷ்ய அதிபர் புதின் ஒரு 'போர் மனிதர்': உக்ரைன் அதிபர் ஆவேசம்



உக்ரைன் தலைநகர் மீதான ரஷ்யாவின் உக்கிரமான தாக்குதலுக்கு மத்தியில், ரஷ்ய அதிபர் புதினை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கடுமையாக விமர்சித்துள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பை சந்தித்து, 20 அம்ச அமைதி திட்டத்தை பற்றி விவாதிக்க உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திற்கு செல்ல திட்டமிட்டிருந்தார். இந்த பயணத்தின் ஒரு பகுதியாக கனடாவின் ஹாலிஃபேக்ஸ் நகருக்கு வருகை தந்த அவர், அங்கு கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்தித்து பேசினார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்யாவின் சமீபத்திய தாக்குதல்களை சுட்டிக்காட்டி, 'நாங்கள் அமைதியை விரும்புகிறோம். ஆனால் அவர் (புதின்) ஒரு போர் மனிதர்' என்று குறிப்பிட்டார். சர்வதேச அமைதி முயற்சிகளுக்கு புதின் அளிக்கும் பதில் இதுதான் என்று கூறிய அவர், போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யாவுக்கு உண்மையான நோக்கம் இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று அதிகாலை தொடங்கிய ரஷ்யாவின் வான்வழித் தாக்குதல் சுமார் 10 மணி நேரம் நீடித்தது. இந்தத் தாக்குதலில் ஈரானிய தயாரிப்பான 519 ஷ ாஹத் டிரோன்கள் மற்றும் கின்ஸ்ஹால் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் உட்பட 40 ஏவுகணைகளை ரஷ்யா ஏவியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. இந்த கொடூர தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர் மற்றும் 2 குழந்தைகள் உட்பட 32 பேர் படுகாயமடைந்தனர். முதியோர் இல்லம் ஒன்றிலிருந்தும் பலர் மீட்கப்பட்டனர்.

எரிசக்தி நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் உள்கட்டமைப்பை குறிவைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலால், கடும் குளிருக்கு மத்தியில் கீவ் பிராந்தியத்தில் சுமார் 5 லட்சம் வீடுகளில் மின்சாரம் மற்றும் வெப்பமூட்டும் வசதிகள் துண்டிக்கப்பட்டன. உக்ரைனின் ராணுவத்திற்கு உதவும் எரிசக்தி மையங்கள் மீது துல்லியமான ஆயுதங்கள் மூலம் 'மிகப்பெரிய தாக்குதல்' நடத்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. (ஐ)

## தைவானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: கட்டிடங்கள் குலுங்கியதால் மக்கள் பீதி



தைவானின் வடகிழக்கு பகுதியில் 7.0 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் தலைநகரில் கட்டிடங்கள் குலுங்கின. தைவான் தீவு ஏற்கனவே நிலநடுக்க அபாயம் மிகுந்த பகுதியில் அமைந்துள்ளது. இந்நிலையில் நேற்றிரவு 11.05 மணியளவில் ஏற்பட்ட திடீர் நிலநடுக்கம், இலாம் கவுண்டிக்கு கிழக்கே 32.3 கி.மீ தொலைவில் 73 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் இதை 6.6 ரிக்டர் என கணித்தாலும், தைவான் நிர்வாகம் 7.0 ரிக்டர் என உறுதிப்படுத்தியது.

தலைநகர் தைபேவில் ஒரு நிமிடம் வரை கட்டிடங்கள் ஆடியதால் மக்கள் அலறியடித்து ஓடினர். உலகின் முன்னணி சிப் தயாரிப்பு நிறுவனமான 'டிஎஸ்எம்சி' பாதுகாப்பு கருதி ஊழியர்களை வெளியேற்றியது. இலாம் கவுண்டியில் 3,000 வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. இந்தியாவிற்கோ அல்லது தைவானுக்கோ 'சுனாமி' ஆபத்து இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 6.0 ரிக்டர் வரை பின் அதிர்வுகள் இருக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தைவான் வரலாற்றில் 1999ம் ஆண்டு 7.3 ரிக்டர் அளவிலும், கடந்த 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் /ஹவாலியன் பகுதியில் 7.2 ரிக்டர் அளவிலும் மிகப்பெரிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டு பெரும் சேதத்தை ஏற்படுத்தின. இந்த வரிசையில் தற்போது பதிவாகியுள்ள நிலநடுக்கம் தைவான் வரலாற்றில் 3வது பெரிய நிலநடுக்கமாக கருதப்படுகிறது. (ஐ)

## வங்கதேசத்தில் தொடரும் ஹிந்துக்கள் கொலை: அமெரிக்கா கண்டனம்



வங்கதேசத்தில் ஹிந்து மதத்தை சேர்ந்த இரண்டு பேர் கொல்லப்பட்டதற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் கூறியதாவது: வங்கதேசத்தில் அனைத்து வகையான மத வன்முறைகளையும் சந்தேகத்துக்கு இடமின்றி அமெரிக்கா கண்டிக்கிறது. அங்கு வசிக்கும் அனைத்து உறுதி செய்ய சமூக மக்களின் பாதுகாப்பை வங்கதேச இடைக்கால அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை வரவேற்கிறோம். மத சுதந்திரம், கருத்து சுதந்திரம் , அமைதியான கூட்டம் ஆகியவற்றுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இதனிடையே அமெரிக்க எம்பி ரோ கண்ணா, வெறுப்பு மற்றும் மதவெறியின் இந்த மோசமான செயல்களுக்கு எதிராக குரல்கள் எழுப்பப்பட வேண்டும் எனக்கூறியிருந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் திபு சந்திர தாஸ் என்ற ஹிந்து மத இளைஞரை கும்பல் ஒன்று கொடூரமாக அடித்து கொன்றது. இந்த சம்பவத்தின் அதிர்ச்சி அடங்குவதற்குள், ராஜ்பாரி மாவட்டத்தில் அம்ரித் மண்டல்(29) என்ற இளைஞர் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவங்களுக்கு வங்கதேச இடைக்கால அரசு கண்டனம் தெரிவித்து இருந்தது. இதனிடையே, வங்கதேசத்தில் ஹிந்துக்கள் கொல்லப்படுவதை கண்டித்து, உலகின் பல்வேறு இடங்களில் போராட்டம் நடந்தது. இதுபோன்ற சம்பவங்களை தடுக்க சர்வதேச அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, பிரிட்டன் தலைநர் லண்டனில் உள்ள வங்கதேச தூதரகம் முன்பு வங்காள ஹிந்து ஆதர்ஷ சங்கம் போராட்டம் நடத்தியது. நேபாளத்திலும் பல இடங்களில் போராட்டம் நடந்தன. பல இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

டில்லி, கோல்கட்டா ஆகிய நகரங்களிலும் போராட்டம் நடந்தது. ஹிந்துக்கள் கொல்லப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ள மத்திய அரசு, அவர்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள ளது. (ஐ)

## 20 கோடிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்த போதைப்பொருள் தொகையும் இதன்போது அதிகாரிகளால் பொறுப்பேற்கப்பட்டது.

சந்தேக நபர்கள் இந்தப் போதைப்பொருள் தொகையை தாய்லாந்தின் பெங்கொக் நகரில் கொள்வனவு செய்து, இந்தியாவின் மும்பை நகருக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் பெண்கள் என்பதுடன், இவர்கள் பொரளை மற்றும் ஒருகொடவத்தை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கொண்டு வந்த பயணப் பைகளில் 20 பொதிகளாக வைக்கப்பட்டிருந்த 20 கிலோ கிராம் 684 கிராம் 'குஷ்' போதைப்பொருள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, பிரதி பொலிஸ் மா அதிபர் அசோக தர்மசேனவின் அறிவுறுத்தலின் பேரில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நான்கு பயணிகளும் கைப்பற்றப்பட்ட 'குஷ்' போதைப்பொருள் தொகையும் இன்றைய தினம் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## டக்ளஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் பொழுது முன்னாள் ஆளுநரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரும், அரசியல் குழு உறுப்பினருமான சுரேன் ராகவன் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கூட்டாட்சிகளில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்பொழுது மகர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால் அங்கு ஆயிரம் கைதிகள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டிய போதும் மூவாயிரத்துக்கும் அதிகமான கைதிகள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

ஆகவே டக்ளஸ் தேவானந்தா முன்னர் பல தடவைகள் எதிரிகளாலும், எதிர்க்கட்சிகளாலும் உயிர் ஆபத்துக்களை எதிர்கொண்ட ஒருவராவார், அவருக்கான பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். என்றார்.

## சிறுமி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்திருந்தார். இந்நிலையில் இவ்வாறு சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை நுழைவாயிலை முற்றுகையிட்டு பெருந்திரளான மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

அந்த வகையில் சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதியைப்பெற்றுத்தருமாறு வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது வைத்தியசாலை பணிப்பாளரை குறித்த இடத்திற்கு வரவழைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறுமியின் மரணம் தொடர்பில் கேள்வி எழுப்பியதோடு, குறித்த மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தனர்.

தொடர்ந்து குறித்த சிறுமியின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியைப் பெற்றுத்தருமாறு இதன்போது மக்களால் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. அந்தவகையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட தரப்பினரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பேருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரின் சடலம் திங்கட்கிழமை(29) முற்பகல் மீட்கப்பட்டுள்ளது. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை சுகாதார தொழிலாளர்கள் அப்பகுதியில் கடமையிலீடுபட்டிருந்த வேளையில் இவ்வாறு சடலமொன்று காணப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் தேற்றாத்தீவு கிராமத்தைச் சேர்ந்த 70 வயதுடைய சுப்பிரமணியம் நேசதுரை என அடையாளம் காணப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிப்படையில், மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவும், மன்னார் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டன.

இதன்போது, மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில உள்ள ஒரு விடுதியில் ஒரு கைக்குண்டுடன் மறைந்திருந்த மேற்படி குற்றத்தைத் திட்டமிட்ட பிரதான சந்தேகநபரும், அவருக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 22 மற்றும் 38 வயதுடைய உயிலங்குளத்தில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் 131 கிலோ கேரளா கஞ்சா மீட்பு!

*கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்ணாங்கண்டி பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 131 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைசெய்யப்பட்டுள்ளார்.*

*கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து வீட்டினை சோதனைக்கு உட்படுத்திய போது கஞ்சா மீட்கப்பட்டிருந்தது.*

*மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றார்.*

## யாழ். சர்வதேச கிரிக்கெட் மைதானம் தொடர்பில் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்டுள்ள தகவல்!

*யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம் கிரிக்கெட் மைதானத்திற்கு ஏற்றதல்ல என்று இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,*

*"நிலம் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது, சுற்றுச்சூழல் நிபுணர்கள் குறித்த நிலம் கிரிக்கெட் மைதானத்திற்கு ஏற்றதல்ல என்று கூறியுள்ளனர். எனவே, இந்த திட்டத்திற்கு சில ஆட்சேபனைகள் உள்ளன," என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இந்த ஆண்டு செப்டம்பரில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவால் இலங்கையின் ஏழாவது சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கான அடிக்கல் யாழ் மண்டைதீவில் உள்ள 48 ஏக்கர் நிலத்தில் நாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# புறாக்கள் அழகுதான்...

லட்சங்கள் முதல் கோடிகள் வரை பணம் புரள்கிறது. குறிப்பாக, தமிழ்நாட்டில் தான் புறா பந்தயம் மிகவும் பிரபலம்.. சென்னை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், திருப்பூர், ராமநாதபுரம் போன்ற நகரங்களில் பரவலாக நடத்தப்படுகிறது.

தமிழகத்தில் புறா போட்டிகள் நடத்துவதற்கு என்றே, பல்வேறு பகுதிகளில் கிளப்புகள் செயல்பட்டு வருகின்றன. இதில், சேலம் முன்னணி வகிக்கிறது. திருச்சி, தஞ்சாவூரிலும் பாரம்பரியமான மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்தியாவில் புறா பந்தயம் 1940ம் ஆண்டுகளில் புறா பந்தயம் பிரபலமாக தொடங்கியது. அப்போது, கொல்கத்தாவில் அதிகம் பிரபலமானது.

இந்தியாவில் மட்டுமின்றி, வங்கதேசம், பாகிஸ்தான் (கராச்சி, பெஷாவர்), சீனா, இந்தோனேஷியா ஈரான், பிலிப்பைன்ஸ், ஜப்பான், தைவான் ஆகிய நாடுகளிலும் புறா பந்தயம் பிரபலமாக நடத்தப்படுகின்றன. புறாக்களை குறிப்பிட்ட தூரங்களுக்கு (100 கிமீ முதல் 1,000 கி.மீ வரை) எடுத்து சென்று, பழைய இடத்துக்கே அவை எவ்வளவு நேரத்தில் திரும்பி வருகிறது என்பதை கணக்கிட்டு, வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. 'ஹோமர்' போன்ற குறிப்பிட்ட சில புற இனங்கள் மட்டுமே பந்தயத்திற்காக வளர்க்கப்படுகின்றன.

புறா என்பது லத்தீன் வார்த்தையான பிபியோவில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பிரெஞ்சு வார்த்தை. இதன் பொருள் 'எட்டிப் பார்க்கும் குஞ்சு' என்பதாகும்.

புறாக்களின் சராசரி ஆயுட்காலம் ஆறு ஆண்டுகள். மனித தலையீடு, வேட்டையாடுதல் போன்ற பல காரணிகளைப் பொறுத்து, இது 3-5 ஆண்டுகளாக சுருங்கி விடும். இல்லை என்றால், 15 ஆண்டுகள் கூட வாழும் என சொல்லப்படுகிறது.

புறாக்களால் 6 ஆயிரம் அடிக்கு அல்லது அதற்கு மேற்பட்ட உயரத்தில் பறக்க முடியும்.

அவை சராசரியாக மணிக்கு 77.6 மைல் வேகத்தில் பறக்கும். சில பந்தய புறாக்கள் மணிக்கு 92.5 மைல் வேகத்தில் பறப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரே நாளில் 600 முதல் 700 மைல்கள் பயணிக்க கூடியவை. உதாரணத்துக்கு, 19ம் நூற்றாண்டில் ஆப்பிரிக்கா- இங்கிலாந்து இடையே அதிகபட்சமாக 55 நாட்கள் பறந்து, 7 ஆயிரம் மைல்கள் கடந்துள்ளது.

பூமியின் காந்தப்புலத்தை உணர்ந்து, தான் சேர வேண்டிய இடத்தை துல்லியமாக அடையாளம் கண்டு பறக்கக் கூடிய அசாத்திய திறமை படைத்த ஒரே பறவை இதுதான்.

இந்தியாவில் புறாக்களைக் கொல்வது இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். காரணம், இவை அட்டவணைப்படுத்தப்பட்ட பறவை இனங்களில் ஒன்றாக உள்ளது. புறாக்களை துன்புறுத்தினாலோ, கொன்றாலோ, வேட்டையாடினாலோ ஏழு ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், கடுமையான அபராதமும் விதிக்க முடியும். இது மாநில சட்டங்களைப் பொறுத்து மாறுபடும். இன்னும் சொல்லப் போனால், புறாக்களால் நமது சொத்துக்கு பாதிப்பு ஏற்பட்டாலும், அவற்றை கொல்வதற்கு அரசிடம் முறையான அனுமதியை பெற வேண்டும்.

தமிழகத்தில் புறாக்கள் அதிகம் காணப்படும் இடங்கள் என்று குறிப்பிட்ட பகுதிகளை குறிப்பிட்டு சொல்வது கடினம். இருப்பினும், தமிழ்நாட்டிலேயே நாகூர் தர்கா பகுதியில் புறாக்களுக்கு என்றே தனி கிராமம் இருக்கிறது. நகரங்களில் உள்ள சதுக்கங்கள், பூங்காக்கள், மசூதிகள், ஆலயங்கள் போன்ற ஆன்மிகத் தலங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் புறாக்கள் அதிகம் காணப்படுகின்றன. சென்னையில் மெரீனா, பெசன்ட் நகர் கடற்கரையில் அதிகளவில் புறா கூட்டத்தை காண முடிகிறது. மக்கள் உணவு அளிப்பதால், அந்த இடங்களில் புறாக்கள் அதிகமாக கூடுவதை வழக்கமாக கொண்டுள்ளன.

இன்று நவீன தொழில்நுட்பங்கள் வந்திருந்தாலும், சில இடங்களில், துறைகளின் தேவை இன்றியமையாததாக இருந்து வருகிறது. குறிப்பாக, காற்றின் மாசை கண்டறியும் ஆய்வுகளுக்கும் தூசு புறாக்களை விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர்.

புறா கறி அதிக புரதம், குறைந்த கொழுப்பு, இரும்புச்சத்து, வைட்டமின்கள் ஏ, பி, டி, இ மற்றும் ஜிங்க், செலினியம், பொட்டாசியம் போன்ற தாதுக்கள் உள்ளன. இது உடல் வலிமை, ஆற்றல், நோய் எதிர்ப்பு சக்தி, இருதய ஆரோக்கியம், இரத்த சோகை, சோர்வு, வாதம் போன்ற நோய்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. மேலும், உடலுக்கு வெப்பத்தை தருகிறது. புறாவின் கறி உடலின் செல்களை சரி செய்யவும், புதிய செல்களை உருவாக்கவும் உதவுகிறது

உடல் எடை அதிகரிப்பதையும் தடுக்கிறது. உடல் சோர்வை போக்கி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. பாரம்பரிய மருத்துவத்தில் காசம், சளி, வாதம் போன்ற நோய்களுக்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. இதயத்தின் செயல்பாட்டை மேம்படுத்த உதவுகிறது. உயர் இரத்த அழுத்தம், கொழுப்பை கட்டுப்படுத்தவும் பரிந்துரை செய்யப்படுகிறது. இரத்த சோகை, தலைச்சுற்றலுக்கு சிகிச்சை அளிக்கவும் உதவுகிறது.

நோய்களில் இருந்து பாதுகாத்து கொள்ள, புறாக்களிடம் நேரடி தொடர்பை தவிர்க்க வேண்டும்.

புறாக்கள் தங்கும் இடங்களை அடிக்கடி சுத்தம் செய்து, கழிவுகள் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

புறாவின் எச்சங்கள், இறகுகளை சுத்தம் செய்த பிறகு, கைகளை சோப்பு போட்டு நன்கு கழுவ வேண்டும்.

வீடுகளில் புறாக்கள் கூடு கட்டுவதைத் தடுக்க, வலைகளை அமைக்கலாம்.

புறாக்களின் எச்சங்கள் படிந்த பகுதிகளை கவனமாகக் கையாள வேண்டும். அவற்றை சுத்தம் செய்வதற்கு முன்பாக, அதன் மீது தண்ணீரை ஊற்றி நனைய வைக்க வேண்டும். அப்போதுதான், அதை சுத்தம் செய்யும் கிருமிகள் கொண்ட தூசுக்கள் பறக்காது. இதை சுத்தம் செய்யும் போது, என்-95 முகக்கவசத்தையும், கையுறைகளையும் கட்டாயம் அணிய வேண்டும்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk